9th November 1957]

SRI T. T. DANIEL : Sir, may I know from the Hon. Minister **whether our Government will consider the feasibility of converting minor ports in Kanyakumari district into major ports ?**

THE HON. SRI P. KAKKAN : அங்கே இருக்கிற சிறிய துறைமுகங் களையும் பரிசீலனை செய்யலாம்.

SRI S. LAZAR : சென்னை தவிர, இதர மைனர் துறைமுகங்களை எல்லாம் அபிவிருத்தி செய்ய வேண்டுமென்ற உடன் அவசியம் ஏற் பட்டிருக்கிறதா ? அல்லது இன்னும் சிறிது காலம் பொறுத்திருக்கலாமா ?

THE HON. SRI P. KAKKAN : எந்த எந்தச் சிறிய துறைமுகங்களை உடனடியாக அபிவிருத்தி செய்ய வேண்டுமோ அந்த அந்தச் சிறிய துறை முகங்களை எல்லாம் அபிவிருத்தி செய்ய ஏற்பாடு செய்யப்படுகிறது.

SRI K. SATTANATHA KARAYALAR : ராஜ்ய புனர் அமைப்பில் துறைமுகங்களின் அபிவிருத்திக்காக என்று கன்னியாக்குமாரி வட்டா ரத்தைச் சேர்ந்த பகுதிக்கு தனியாகப் பணம் கொடுக்கபட்டிருக்கிறதா ? அப்படியானால் அந்தப் பகுதியை அப்படியே அந்த வட்டாரத் துறைமுக அபிவிருத்திக்கு செலவு செய்ய உத்தேசமா ?

THE HON. SRI P. KAKKAN : இதற்கும் தனிக் கேள்வி போட வேண்டும்.

Bus permits

* 126 *Q*.—SRI K. R. VISWANATHAN : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether the Government have received any representation, dated 12th August 1957, from certain lorry owners of Arcot, North Arcot district, regarding the issue of new bus permits; and

(*b*) if so, the action taken thereon?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) Yes, Sir.

(*b*) It is under the consideration of the Government.

SRI M. S. SELVARAJAN : Sir, in issuing these bus permits, will any special consideration be shown to the repatriates from overseas?

THE HON. SRI V. RAMAIAH : In issuing these bus permits, under the rules as they stand, I do not think it possible for new-comers to come in. But the question of issuing permits to repatriates from Ceylon can be considered.

* SRI M. KALYANASUNDARAM : கனம் அங்கத்தினர் கேட்ட கேள்வியும், அமைச்சர் அதற்கு அளித்த பதிலும் எங்களுக்கு எல்லாம் ஒன்றும் புரியாததாக இருக்கிறது. அந்தக் கடிதத்தில் அவர்கள் என்ன விவரம் கொடுத்திருக்கிறார்கள் ? அதன் பேரில் சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்தார்கள் என்பதை விளக்க வேண்டுமென்று கோருகிறேன்.

THE HON. SRI V. RAMAIAH : அவர்கள் என்னிடத்தில் கொடுத்த மகஜரில் அநேக பிரச்சனைகள் இருந்தன. முக்கியமான ஒரு பிரச்சனை லாரி நடத்துகின்றவர்களுக்கும் பஸ் பர்மிட் போலக் கொடுக்க வேண்டும் என்பது. அதையும் சர்க்கார் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது என்று சொன்னேன்.

[9th November 1957

SRI M. P. SUBRAMANIAM : அமைச்சர் அவர்கள் இனிப் புதிதாக வருபவர்களுக்குப் பஸ் பர்மிட் வழங்கப்படமாட்டாது என்று சொன்னார்கள். அப்படியானால் புதிதாக பஸ் தொழிலை நடத்த யாரையும் அனுமதிக்கமாட்டார்கள் என்று அர்த்தமா ? இதர தொழில்களுக்கு எல்லாம் புதிதாக ஆரம்பிக்க வசதி இருக்கும்போது பஸ் தொழிலில் மட்டும் என் அந்த வசதி மறுக்கப்பட வேண்டும் ?

THE HON. SRI V. RAMAIAH : புதிதாக வருகிறவர்களுக்குக் கிடைக்காது என்று நான் சொல்லவில்லை. ஒரு பஸ், இரண்டு பஸ் வைத்துக் கொண்டிருக்கிறவர்கள் அந்தத் தொழில் நன்றாக நடைபெற வேண்டுமானால் குறைந்தது 5 பஸ்களாவது வைத்துக் கொள்ளவேண்டும் என்பதாகத்தான் ஒரு டைரெக்ஷன் கொடுத்து இருக்கிறோம். புதிதாக அந்தத் தொழிலை நடத்த இனி யாரும் வரமுடியாது என்கிறபடி உத்திரவு போடவில்லை.

SRI M. C. MUTHUKUMARASWAMY : ஹரிஜனங்களில் யாராவது பஸ் நடத்த வேண்டும் என்பதற்கு விண்ணப்பம் போட்டிருக்கிறார்களா ? இல்லையானாலும்கூட பொருளாதார நிலைமையில் மிகவும் பிற்போக்காக உள்ள அவர்களிடையே ஒரு கூட்டுறவு ஸ்தாபனம் மூலமோ, அல்லது சர்க்காரே அவர்களுக்கு பண உதவி செய்தோ அந்தத் தொழிலை அவர்களும் நடத்த அனுமதிக்கப்படுவார்களா ?

THE HON. SRI V. RAMAIAH : சில ஹரிஜனங்களிடத்திலிருந்தும் விண்ணப்பம் வந்திருக்கிறது. பஸ் நடத்த வேண்டுமென்றால் போதுமான மூலதனம் வேண்டும். அதற்குத் தகுந்தாற்போல் கூட்டுறவு சங்கங்களை அமைத்துக்கொண்டு, அதன் வாயிலாக பஸ் தொழிலை நடத்த அவர்கள் முன் வந்தால் சர்க்கார் அதையும் கவனிக்கும்.

SRI A. R. SUBBIAH MUDALIAR : பஸ் பர்மிட்டு கொடுப்பதில் ஒரு ஜில்லாவிற்கு ஒன்று இல்லாமல், அந்த ஜில்லாவிற்கும் அப்பாற்பட்டுக் கொடுப்பார்களா ?

MR. SPEAKER : ஒரு தனிப்பட்ட ஜில்லாவைப் பற்றிய கேள்வியில் இந்தக் கேள்வி எப்படி வரும் ? அமைச்சர் பதில் அளிப்பதானால் எனக்கு ஆட்சேபணை இல்லை.

THE HON. SRI V. RAMAIAH : இப்போது ஒரு ஜில்லாவிற்கு அப்பாற்பட்டும் பர்மிட் கொடுப்பதில் தடை இல்லை. கொடுத்துக்கொண்டு வருகிறோம்.

Executive Officers, Hindu Religious and Charitable Endowments Department

* 127 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the number of Executive Officers serving under the Hindu Religious and Charitable Endowments (Administration) Department; and

(*b*) the number belonging to the Backward Communities and Scheduled Castes?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) 366.

(*b*) Number of Executive Officers belonging to Backward Classes.	73
Number of Executive Officers belonging to Scheduled Castes.	3